


புரட்சிப்
# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | பிப்ரவரி 04, 2021 | புரட்சி 20 | முழக்கம் 4 | விலை: ரூ.3.00


## “கோயில் புரட்சி”

*மதுரை திருமங்கலம் அருகே டி. குன்னத்தூர் என்ற ஒரு கிராமம். இங்கே 12 ஏக்கர் நிலத்தில் புதிய இந்து கோயில் ஒன்று ‘எழுந்துள்ளது’; அதாவது கட்டப்பட்டிருக்கிறது. கோயிலை ‘எழுப்பியவர்’ உதயகுமார் என்ற அமைச்சர். சேர, சோழ, பாண்டியர்கள் தான் கோயில் கட்ட வேண்டுமா, என்ற மரபை உடைத்திருக்கிறார். அந்த காலத்து மன்னர்களுக்கு நாங்கள் குறைவானவர்கள் அல்ல; அவர்களைப் போலவே மக்களைச் சுரண்டிய பணம், காசுகள் எங்களிடமும் இருக்கிறது என்று காட்டியிருக்கிறார். சபாஷ், சரியான வீரம்!*

*கோயிலுக்குள் ‘பிரதிஷ்டை’ செய்யப்பட்ட தெய்வங்கள், எம்.ஜி.ஆர். – ஜெயலலிதா! இந்த தெய்வங்களுக்கு உலகிலேயே எங்கும் இல்லாத ஒரு ‘மகிமை’ உண்டு. மக்கள் நேரிலேயே பார்த்த கடவுளும் பழகிய கடவுளும் குடியிருக்கும் கோயில் இது ஒன்று தான்! இது ஒன்று மட்டுமே தான் என்பது நிச்சயம் என்கிறார், ஒரு பெரியாரிஸ்ட்.*

*இன்னும் ஏராளமான சிறப்புகளும் உண்டு. கோயில் ‘பிரதிஷ்டை’ செய்யப்பட்ட ‘தெய்வச் சிலை’களுக்கு வேத பண்டிதர்கள் மந்திரங்களை ஓதினால்தான் அது கடவுளாகும். பிறகு கோபுரத்தில் அதே வேத புரோகிதர்கள் ‘கும்பாபிஷேகம்’ நடத்தி, தீட்டுக் கழித்து, சடங்குகள் நடத்தி முடித்த பிறகே பக்தர்கள் அனுமதிக்கப்படுவார்கள்! அதுவும் கர்ப்பக்கிரகத்துக்கு வெளியே வரை தான்! இந்த கோயில் திறப்புக்கு புரோகிதர்களின் கும்பாபிஷேகம், சடங்குகள் இல்லை. இதற்கு ஓ.பி.எஸ். – ஈ.பி.எஸ்.சும் ‘ரிமோட்’ கண்ட்ரோலை அழுத்தி கோயிலைத் திறந்து விட்டார்கள். மந்திர சக்தி தேவை இல்லை. ‘ரிமோட்’ இயங்க ‘பேட்டரி’ ‘சக்தி’ இருந்தாலே போதும்!*

*“அய்யோ! அய்யோ! பிரதிஷ்டை செய்யப்படாத சிலைகளை தெய்வங்கள் என்கிறார்களே! மானுடர் களாக பூமியில் வாழ்ந்தவர்களை கடவுளாக்கு கிறார்களே! இவையெல்லாம் கோயில் சாஸ்திரத்துக்கு விரோத மாயிற்றே; எந்த ஆகமத்திலும் இப்படி ஒரு கோயில் பற்றிக் கூறவே இல்லையே” என்று வேத பண்டிதர்கள் – சங்கராச் சாரிகள் – ‘ஆச்சார சீலர்கள்’ ஒரு ‘முணுமுணுப்பைக்’ கூட காட்டவில்லை! ‘கப்சிப்’! காட்டாதது மட்டுமல்ல; எங்களுக்கு வரவேண்டியது வந்தால் போதும் என்று ‘யாகம்’ நடத்த வந்து விட்டார்கள். ‘வேத பண்டித சிகாமணிகள்’ யாக சாலையில் வேத மந்திரங்கள் ஓத ‘பழனியும் – பன்னீரும்’ பவ்வியமாக அதில் கலந்து கொண்டார்களாம்.*

*‘கோ’ மாதா பூஜை நடத்த 120 ‘பிராமணர்’களுக்கு பசு தானம் செய்திருக்கிறார், முதலமைச்சர் பழனிச்சாமி! ‘பாவம்’ தொலைய வேண்டுமே! பெற வேண்டியதைப் பெற்றுக் கொண்டு விடைபெற்றுக் கொண்டது வேத குலம்.*

*மற்றபடி ‘அர்ச்சனை’களை, ‘பழனியும்–பன்னீரும்’ சமஸ்கிருதம் கலக்காத தூய தமிழிலேயே ஓதி முடித்திருக் கிறார்கள். ‘அர்ச்சனை’ கடவுள்களுக்கு அல்ல; தி.மு.க.வுக்கும் ஸ்டாலினுக்கும் எதிராகத்தான்!*

*“ஸ்டாலின் வெற்றி பெறவே முடியாது; அ.தி.மு.க. தொண்டன் தடுத்து நிறுத்துவான்; 10 ஆண்டுகளாக காய்ந்த மாடுபோல் தி.மு.க. உள்ளது” என்றெல்லாம் ‘நாமவாளி’ அர்ச்சனையை தேர்தல் பயபக்தியோடு செந்தமிழிலே ஓதி கோயிலுக்குள் ‘அரசியல்’ நடத்தியிருக்கிறார்கள்.*

*அது மட்டுமா? ‘கடவுள்’ எது என்பதற்கு விளக்கமே தந்து விட்டார்கள்.*

*“நாட்டு மக்களுக்கு நற்பணி புரிந்து, மக்கள் மனதில் இடம் பிடித்தவர்கள் தான் உண்மையான தெய்வங்கள்” என்று பழனிச்சாமி பேசியிருக்கிறார்.*

*‘தெய்வ சக்தி மட்டும் போதாது; மக்கள் சக்தியும் வேண்டும்; இதுதான் அ.இ.அ.தி.மு.க. தெய்வீகக் கொள்கை’ என்று பன்னீர் செல்வம் தெளிவான ‘ஆன்மிக’ விளக்கத்தைக் கூறிவிட்டார். இதன் மூலம் எதைச் சொல்ல வருகிறார்கள்?*

*“கோயிலுக்குள் இருக்கும் ‘இந்து’த் ‘தெய்வங்கள்’ நாட்டு மக்களுக்கு நற்பணிகள் செய்யாத போது எப்படி தெய்வமாக முடியும்? என்கிறார் முதலமைச்சர். மக்கள் சக்தி அவைகளுக்கு கிடையாது; கடவுள் சக்தி இருந்தால் மட்டும் கடவுளாகிட முடியாது என்கிறார் துணை முதலமைச்சர். நாட்டை ஆளும் முதலமைச்சர், துணை முதலமைச்சர் பழுத்த ‘இந்து’க்களாக இருந்து கொண்டே இந்துக் கடவுள்களை இப்படி அவமதிக் கிறார்களே!” என்று ஆன்மிகங்களோ, உண்மை ஆஸ்திகர் களோ கொதித்ததாகத் தெரியவில்லை; பரவாயில்லை!*

*பக்திக்குள்ளும் ‘அரசியலுக்காக’ பக்தி உடைப்பு நடக்கிறது. பார்ப்பன ‘தினமலர்’ ஏடு மட்டும் கடுமையாகக் கண்டித்து புலம்பித் தீர்த்துள்ளது.*

*பெரியார் அங்கேயும் வேலை செய்ய ஆரம்பித்து விட்டார் என்கிறார் ஒரு கருப்புச் சட்டைக்காரர், காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு!*

*கோயில்கள், மனிதர்களுக்கு மட்டும் தான்; கடவுள் சிலைகளுக்கு அல்ல என்பதுகூட பகுத்தறிவு தானே?*

**– கோடங்குடி மாரிமுத்து**

# கரூரில் ஜாதி வெறிப் படுகொலை: கண்டித்து கழகம் ஆர்ப்பாட்டம்




***கரூரில் பொறியாளர் ஹரிஹரன் ஜாதி ஆணவப் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து 27.01.2021 அன்று திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.***

கரூர் தபால் தந்தி அலுவலகம் முன்பு நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை வகித்தார். பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். மூத்த வழக்கறிஞர் ப.பா. மோகன் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்.

கரூரில் கடந்த 6ஆம்தேதி நடைபெற்ற ஜாதி ஆணவக் கொலை சம்பவத்தைக் கண்டித்தும், குரலற்ற விளிம்பு நிலையில் வாழக்கூடிய சமூக மக்களுக்கு பாதுகாப்பு, பாதிக்கப்பட்டவர் களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்; சாதி மறுப்புத் திருமணம் புரிந்து கொண் டோருக்கும், திருமணம் புரிய இருப்போர் களுக்கும் பாதுகாப்பு வழங்க தனி ஆணையத்தை அரசு அமைக்க வேண்டும்; சாதி மறுப்புத் திருமணம் புரிந்தோருக்கு அரசு தனி இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளும் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.

சாமானிய மக்கள் கட்சி குணசேகரன் துவக்கவுரையாற்றினார். திருப்பூர் துரைசாமி - பொருளாளர், திராவிடர் விடுதலைக் கழகம், லட்சுமிகாந்தன் - அனைத்து இந்திய இளைஞர் பெருமன்றம், ராமசந்திரன் - CPIML, பிரகாஷ் ராஜ் - ஆதித்தமிழர் பேரவை, தனபால் - த.பெ.தி.க., தமிழ் ராஜேந்திரன் - வழக்கறிஞர், பிரகலாதன் - தி.க., தமிழ் கவி - திராவிடர் இயக்க தமிழர் பேரவை, கிருஷ்ணமூர்த்தி - தீண்டாமை ஒழிப்பு முன்னணி, கத்தார் மாணிக்கம் - வி.சி.க. ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

திராவிடர் விடுதலைக் கழக கரூர் மாவட்டத் தோழர் வடிவேல் நன்றி கூறினார். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு - ஈரோடு ரத்தினசாமி, அமைப்பு செயலாளர், தி.வி.க.

ஆர்ப்பாட்டத்திற்கு கோவை, திருப்பூர், சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர் பகுதிகளி லிருந்து திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டத்திற்கு பிறகு, கரூரில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ஆணவப் படுகொலை செய்யப்பட்ட ஹரிஹரன் குடும்பத்தினரை 27.01.2021 அன்று சந்தித்து நடந்த சம்பவங்கள் குறித்து விசாரித்தறிந்து அவரது குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவித்தார்.

## மாட்டுச் சாண ‘சிப்’ அணுவீச்சை தடுக்காது: போலி அறிவியலைக் கண்டித்து 600 விஞ்ஞானிகள் கூட்டறிக்கை

பசுமாட்டுச் சாணத்திலிருந்து தயாரிக்கப்படும் ‘சிப்’ கருவிகள், அணுக்கதிர் வீச்சு ஆபத்துகளைத் தடுக்கும் என்று கருநாடக அரசு அமைத்துள்ள ‘இராஷ்டிரிய காமதேனு ஆயோக்’ என்ற அமைப்பு அறிவித்திருந்தது. கருநாடக அரசு இந்த ‘சிப்’களை தயாரிக்கும் வேலைகளையும் தொடங்க திட்டமிட்டிருந்தது. இது விஞ்ஞானபூர்வமாக சோதனை நடத்தப்பட்டு உறுதியாகியுள்ளதாக மேற்குறிப்பிட்ட அமைப்பின் தலைவர் வல்லபாகாய் கத்திரியா, கடந்த அக். 2020இல் அறிவித்திருந்தார். இது அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை. இந்தக் கூற்றுக்கு எந்த அறிவியல் சான்றும் கிடையாது என்று 600 விஞ்ஞானிகள் கூட்டாக கையெழுத்திட்டு மறுப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். கத்திரியாவுக்கு எழுதிய அந்த மறுப்பில் போலி அறிவியலைப் பரப்புவதாகக் குற்றம் சாட்டியுள்ளனர். இதற்கு பதிலளித்த கத்திரியா - விஞ்ஞானிகள் மறுப்பு நகைப்புக்குரியது என்று கூறி தமது கருத்துக்கு சவுராஷ்டிரா பல்கலைக்கழக பேராசிரியர் மிதிர்ஜோஷி சான்று வழங்கியிருக்கும் கடிதத்தையும் இணைத்திருந்தார். இந்தப் பரிசீலித்த விஞ்ஞானிகள் அறிவியல் நடைமுறைகள் அத்தனையும் மீறி இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே பசுமாட்டு சாணம் அணுவீச்சுகளைத் தடுக்கும் என்று முடிவு செய்து கொண்டு அதற்கேற்ப சோதனைகளை வடிவமைத்து அறிவியலை கேலிக்குரியதாக்கியுள்ளது இந்த அமைப்பு என்று விஞ்ஞானிகள் உறுதியாக மறுத்துள்ளனர்.

## ‘நிமிர்வோம்’ வாசகர் வட்டம்

*நிமிர்வோம் 17 ஆவது வாசகர் வட்டம், சென்னை தலைமை அலுவல கத்தில் 30.01.2021 அன்று மாலை 6 மணி யளவில் தொடங்கி நடைபெற்றது.*

*தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் நாசர் புரூனோ, ‘சாதியின் குடியரசு’ என்ற புத்தகத்தை திறனாய்வு செய்து உரையாற்றினார். இறுதியாக திராவிட இயக்க ஆட்சியில் நிகழ்த்தப்பட்ட சாதனைகளை, திமுக பொதுக்குழு உறுப்பினர் சைதை மா. அன்பரசன் விளக்கி உரையாற்றி னார். நிகழ்வை பெரியார் யுவராஜ் ஒருங்கிணைத்து, தொகுத்து வழங்கினார்.*



**தலையங்கம்**

## அண்ணா பல்கலைக் கழகத்தில் எம்.டெக். வகுப்புகளை மூடுவதா?

அண்ணா பல்கலைக்கழகத்தில் நடுவண் அரசு நிதி உதவியுடன் நடத்தப்படும் 'எம்.டெக்' எனும் மேல் பட்டப் படிப்புக்கான இரண்டு வகுப்புகளை பா.ஜ.க. ஆட்சி மூடிவிட முடிவு செய்துவிட்டது. காரணம், நிதிப் பற்றாக் குறையல்ல; நிர்வாகக் காரணம் அல்ல; அல்லது இந்தப் பிரிவுகளில் சேருவதற்கு மாணவர்கள் ஆர்வம் காட்டவில்லை என்ற காரணம் அல்ல. இடஒதுக்கீடு என்ற கொள்கையைக் காரணம் காட்டி இந்த வகுப்புகளை நிறுத்தி வைத்திருப்பதுதான் கொடுமை.

குழந்தை யாருக்கு சொந்தம் என்று இரண்டு பெண்களிடையே ஏற்பட்ட மோதலில் குழந்தையை வெட்டி இருவருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுங்கள் என்று ஒரு பெண் கோரிக்கை வைத்ததாக ஒரு கதை உண்டு. உண்மையான தாயாக பெற்ற மகளின் மீது பாசம் கொண்டவராக இருந்திருந்தால் இப்படிக் கூறியிருக்க மாட்டார். குழந்தையை இரண்டாக வெட்டி பங்கு போடச் சொன்ன பெண்ணின் மனநிலைக்கும் நடுவண் பா.ஜ.க. ஆட்சியின் இந்த முடிவுக்கும் எந்த வேறுபாடும் இல்லை.

அண்ணா பல்கலைக்கழகம் தமிழ்நாட்டின் கல்விச் சொத்து. தமிழ்நாடு அரசால் தமிழ்நாடு மக்களால் கட்டி எழுப்பப்பட்ட மதிப்பு மிக்க நிறுவனம். தமிழகக் கல்வி உரிமையை பறித்துக் கொண்ட பா.ஜ.க. ஆட்சி தமிழ்நாட்டின் சமூக நீதியைக் குழி தோண்டி புதைத்து வருகிறது. 'நீட்' தேர்வை திணித்தார்கள். மருத்துவப் படிப்பில் அகில இந்திய கோட்டாவுக்கான இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் உரிமைகளைப் பறித்தார்கள். அண்ணா பல்கலைக் கழகத்தை இரண்டாகப் பிரித்து வெளிநாட்டு மாணவர்கள் படிப்புக்கு கதவு திறந்து விடும் முயற்சிகளை துணைவேந்தர் வழியாக மேற்கொண்டார்கள். தமிழ்நாடு அரசின் எதிர்ப்பு பற்றி கவலைப்படவில்லை. இப்போது அதே அண்ணா பல்கலைக்கழகத்தில் 'எம்.டெக்.' என்ற மேல்பட்டப் படிப்புக்குரிய 'எம்.டெக் பயோ டெக்னாலஜி', 'எம்.டெக். கம்ப்யூடேஷனல் பயோலாஜி' என்ற இரண்டு பிரிவுகளையும் மூடி விட்டார்கள். இந்த தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகத்தில் தமிழகத்தில் பின்பற்றப்படும் 69 சதவீத இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்த வேண்டும் என்கிறது தமிழக அரசு. ஆனால் மய்ய அரசின் 27 சதவீத இடஒதுக்கீட்டை மட்டுமே பின்பற்றுவோம்; இல்லாவிட்டால் இரண்டு பிரிவு வகுப்புகளையுமே இழுத்து மூடிவிடுவோம் என்ற முடிவுக்கு நடுவண் பா.ஜ.க. ஆட்சி வந்திருப்பது இடஒதுக்கீடு கொள்கையில் 'மனுவாதி'களுக்கு உள்ள வெறுப்பையும் கசப்பையுமே உணர்த்துகிறது. இந்த வகுப்புகளில் சேருவதற்கு இரண்டு நுழைவுத் தேர்வுகளை மாணவர்கள் எழுத வேண்டும். ஒன்று பா.ஜ.க. ஆட்சி திணித்த 'நீட்' தேர்வு. இதில் தேர்ச்சி பெற்ற பிறகு பையோ டெக்னாலஜிப் பாடத்தில் கிராட்ஜுவேட் ஆட்டிடியுட் டெஸ்ட் (Graduate attitude Test-B) என்ற தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். இரண்டு தேர்வுகளிலும் தேர்ச்சி பெற்று 45 மாணவர்கள் எம்.டெக்கில் சேரக் காத்திருந்தபோது இந்த அதிர்ச்சியான அறிவிப்பால் மாணவர்களும் பெற்றோர்களும் நிலைகுலைந்து நிற்கிறார்கள்.

மத்திய அரசு நிதி உதவி வழங்குகிறது என்ற காரணத்தால் இத்தகைய விபரீத முடிவுகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. 'எம்.டெக். பயோ டெக்னாலஜி' 1985ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டு விட்டது. இதில் படிக்கும் மாணவர்களுக்கு மாதம் ரூ.12,000 உதவித் தொகை வழங்கப்படுகிறது. 'கம்ப்யூடேஷனல் பயோலஜி' 2014ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இதற்கு மாதம் ரூ.12,500 உதவித் தொகை வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு வரை டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகம் 'பயோ டெக்னாலஜி'க்கான நுழைவுத் தேர்வையும் புதுச்சேரி பல்கலைக்கழகம் கம்ப்யூடேஷனல் பயோலாஜிக்கான நுழைவுத் தேர்வையும் நடத்தி வந்தன. இவ்வாண்டு உ.பி.யில் பைசாபாத்தில் உள்ள பயோ டெக்னாலஜி மண்டல மய்யத்துக்கு இந்தத் தேர்வுகள் நடத்தும் பொறுப்புகளை மாற்றி வழங்கி புதிய குழப்பங்களை பா.ஜ.க. ஆட்சி உருவாக்கி வகுப்புகளையே மூட வைத்துவிட்டது.

இந்த இரண்டு வகுப்புகளும் மிகவும் மதிப்பு மிக்கவை. அதுவும் கொரானாவுக்குப் பிறகு இந்தப் படிப்புகளுக்கான முக்கியத்துவம் கூடியிருக்கிறது. இந்த நிலையில், "உதவித் தொகை வழங்கா விட்டாலும் பரவாயில்லை; வகுப்புகளை மூடாதீர்கள்; காத்து நிற்கும் மாணவர்கள் வாழ்க்கையை ஓராண்டு காலம் வீணடிக்காதீர்கள்" என்று பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கும் செய்திகள் ஏடுகளில் வெளி வந்திருக்கின்றன. இந்த வகுப்புகளை தனியார் கல்லூரிகளில் படிக்க மாணவர்கள் பெரும் தொகையை செலவிட வேண்டியிருக்கும்.

அண்ணா பல்கலைக்கழகத்தில் சூரப்பா என்ற ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சார்ந்தவரை ஆளுநர், துணைவேந்தராக்கியதிலிருந்தே குழப்பங்கள் தலைதூக்கி விட்டன. மாநில அரசு அவர் மீது விசாரணை ஆணையம் ஒன்றை நியமித்திருக்கிறது. இந்த நிலையில் தமிழ்நாட்டில் இடஒதுக்கீடு எனும் சமூக நீதியைக் குலைத்து சமூக நீதிப் பார்வையில் தமிழகம் கட்டியமைத்த கல்வி அமைப்பையே சீர்குலைக்கும் செயல்பாடுகள் தொடர்ந்து அரங்கேற்றப்பட்டு வருகின்றன. 'உயர்ஜாதி ஏழை'களுக்கான 10 சதவீத இடஒதுக்கீடு தமிழ்நாட்டில் அமுல்படுத்தப்படவில்லை. அது மாநில அரசுகளின் விருப்பம் சார்ந்த சட்டம் தான்; கட்டாயப்படுத்த முடியாது. தமிழக ஆளுநர் வழியாகவும் மறைமுக அழுத்தங்கள் தரப்பட்டன. இதனால் ஆத்திரமடைந்த 'மனுவாத' பார்ப்பனர்கள் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீட்டையே சீர்குலைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அண்ணாபல்கலைக்கழகத்தில் இழைக்கப்பட்டுள்ள இந்த அநீதிக்கு கண்டனம் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு அரசு இதைக் கடந்து போக முயற்சிக்காமல் எம்.டெக். வகுப்புகளைத் தொடங்குவதற்கு பா.ஜ.க. ஆட்சிக்கு உரிய அழுத்தம் தர வேண்டும்.

### 'ஆக்ஸ்பாம்' அறிக்கை சுட்டிக்காட்டுகிறது

## ஜாதி – நிறவெறி – பெண் பாகுபாடுகளால் ஏற்றத் தாழ்வுகள் அதிகரிப்பு

கரோனா பரவலுக்குப் பிறகு உலகின் ஏற்றத்தாழ்வு இன்னும் உச்சம் அடைந்திருக்கிறது. கரோனா பரவல், உலக நாடுகளில், ஒரே நேரத்தில் ஏற்றத்தாழ்வை அதிகப்படுத்தி இருக்கிறது. வரலாற்றில் இதற்கு முன் இவ்வாறு ஒரே நேரத்தில் அனைத்து நாடுகளிலும் ஏற்றத்தாழ்வு அதிகரித்ததில்லை. கரோனா ஊரடங்கு கால கட்டத்தில் மட்டும் உலக அளவில் கோடீஸ்வரர்களின் சொத்து மதிப்பு பல மடங்கு உயர்ந்து இருக்கிறது. கோடீஸ்வரர்கள் மேலும் மேலும் செல்வத்தைக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனையோர் ஏழ்மையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

உலகின் பொருளாதாரக் கட்டமைப்புதான் இத்தகைய ஏற்றத்தாழ்வுக்குக்கு காரணம் என்கிறது சமீபத்தில் வெளியான ஆக்ஸ்ஃபாம் அறிக்கை. சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள டாவோஸ் நகரில், உலகப் பொருளாதார மாநாடு சென்ற வாரம் நடைபெற்றது. அதையொட்டி ஆக்ஸ்ஃபாம், உலகின் ஏற்றத்தாழ்வு குறித்து 'the Inequality virus' என்ற தலைப்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. கரோனா வைரஸ் எவ்வாறு உலகில் ஏற்றத்தாழ்வை அதிகரித்திருக்கிறது என்பதையும், உலகின் பொருளாதாரக் கட்டமைப்பு எவ்வாறு நியாயமற்றதாக இருக்கிறது என்பதையும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

தற்போதைய ஏற்றத்தாழ்வுக்கு மூன்று காரணிகள் முதன்மைக் காரணங்களாக இருப்பதாக அந்த அறிக்கைக் குறிப்பிடுகிறது. தாராள பொருளாதாரக் கொள்கை, ஆணாதிக்கப் போக்கு, வெள்ளை மேலாதிக்கம். 1980களில் தாராளமய அடிப்படையில் உலகின் பொருளாதாரக் கட்டமைப்பு உருவாகத் தொடங்கியது. கட்டுப்பாடற்ற சுதந்திரமான சந்தை, தனி மனிதவாதம் ஆகியவை தாராளமய பொருளாதாரத்தின் அடிப்படை.

அது, பொருளாதாரத்தில் அரசின் தலையீட்டைக் குறைத்து, தனியார் நிறுவனங்களின் ஆதிக்கத்தை அதிகப்படுத்துகிறது. இந்தப் பொருளாதாரக் கொள்கையானது சந்தை என்பது சுயாதீனமானது என்றும், அது நிறம், பாலினம், இனம் பாகுபாடற்று இயங்கக் கூடியது என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இயங்குகிறது. அதன் பார்வையில், தனி மனிதனின் வாழ்க்கைப் போக்கு என்பது அவனது திறமை, முயற்சி, தேர்வு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது என்பதாகும்.

ஆனால், கடந்த நாற்பது ஆண்டுகளில் தாராள பொருளாதாரக் கொள்கை ஏற்படுத்திய விளைவுகள் நடைமுறையில் வேறொன்றாக இருக்கிறது. சமூகத்தில் சில பிரிவுகளிடம் மட்டுமே, அதாவது உயர் வர்கத்தினரிடமே, செல்வம் குவிந்து கொண்டு இருக்கிறது. மற்றவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் உழைத்துக் கொண்டிருந்தாலும் அதே நிலைமையிலே இருக்கின்றனர். கடந்த 40 வருடங்களில், உலகின் 1 சதவீதத்தினரின் வருமானம், உலகின் மக்கள் தொகையில் பாதி மக்களின் மொத்த வருமானத்தைவிட இருமடங்காக உயர்ந்து இருக்கிறது.

உலகின் 2000 கோடீஸ்வரர்களிடம் இருக்கும் சொத்தானது, அவர்களின் 2 ஆயிரம் தலைமுறையினர் வாழ்க்கைக்கு செலவிடத் தேவையான அளவை விடவும் அதிகம். இன்னொரு பக்கம். உலகின் பெரும்பாலான மக்கள் மிகச் சொற்பமான வருமானத்தைக் கொண்டிருக்கின்றனர்.

வெள்ளை இன மேலாதிக்கமும், ஆணாதிக்கப் போக்கும் தற்போதைய ஏற்றத்தாழ்வுக்கு முக்கியமான காரணங்கள் என்று ஆக்ஸ்ஃபாம் அறிக்கை குறிப்பிடுகிறது. வெள்ளை மேலாதிக்கத்தால், கறுப்பின மக்கள் எவ்வளவு பாதிப்பைச் சந்தித்திருக்கிறார்கள் என்பதை அந்த அறிக்கை விவரிக்கிறது. **வெள்ளை மேலாதிக்கத்தை, இந்தியச் சூழலில் சாதிய ஒடுக்குமுறை என்பதாகப் புரிந்து கொள்ள வேண்டும் ஆக்ஸ்ஃபாம் அறிக்கை மீண்டும் மீண்டும் பாலினப் பாகுபாடு பற்றி பேசுகிறது.**


பொருளாதாரம் சார்ந்து, உலக அளவில் ஆண் பெண் பாகுபாடு நிலவுவதை அந்த அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. இந்தியாவில் நிலைமை இன்னும் மோசம். கரோனாவுக்கு பிறகு, பலர் ஊதியமின்றி வேலை பார்த்து வருகின்றனர். ஆறு மாதங்களாக ஊதியம் பெறாமல் வேலை பார்ப்பவர்களும் இருக்கின்றனர். இதில் ஆண்களை விட பெண்களின் எண்ணிக்கையே அதிகம். இந்தியாவில் பெண்கள் இடையிலான வேலையின்மை கரோனாவுக்கு முன்பு 15 சதவீதமாக இருந்தது.

தற்போது 18 சதவீதமாக உயர்ந்து இருக்கிறது. பெண்களுக்கு எதிரான வன்முறை கடந்த ஒரு ஆண்டில் 60 சதவீதம் உயர்ந்து இருக்கிறது. இந்தியாவில் பாலினப் பாகுபாடு பொருளாதார ரீதியாக, வேலை வாய்ப்பு சம்பந்தப்பட்டதாக மட்டுமில்லை; சமூக ரீதியாகவே தீவிரமான பாகுபாடு நிலவுகிறது. சமீபத்தில் வெளியான 'தி கிரேட் இண்டியன் கிச்சன்' (The great indian kitchen) என்ற மலையாளத் திரைப்படம், இந்திய சமூகத்தில் பெண்களின் நிலைமை என்னவாக இருக்கிறது என்பதை பட்டவர்த்தமாகக் காட்டுகிறது.

ஏற்றத்தாழ்வைச் சமாளிப்பதற்கான முதன்மையான வழிமுறைகளில் ஒன்று, வரிவிதிப்பு. கோடீஸ்வரர்களுக்கும், பெரு நிறுவனங்களுக்கும் அதிக வரி விதிக்க வேண்டும் என்றும், அந்தப் பணத்தைக் கொண்டு மக்களுக்கு பிறப்பிலிருந்து இறப்பு வரை இலவச சேவை வழங்க வேண்டும். மிகக் குறிப்பாக, மருத்துவம், கல்வி போன்ற சேவைகளை மக்களுக்கு இலவசமாக வழங்க வேண்டும் என்று ஆக்ஸ்பாம் வலியுறுத்துகிறது. ஒருவர் வேலையிழப்பது என்பது இந்த உலக இயக்கத்திலிருந்து அவர் துண்டிக்கப்படுவதாக மாறி இருக்கிறது. அந்தவகையில் வேலை உத்திரவாதத்தை உருவாக்குவது ஒரு அரசின் கடமையாகிறது.

வேலை பாதுகாப்பு, தொழிலாளர் உரிமைகள், பிணிக்கால ஊதியம், பேறு கால விடுப்பு, வேலையிழந்தவர்களுக்கான சலுகைகள், ஓய்வூதியம் ஆகியவற்றை அனைவருக்கும் உறுதி செய்ய வேண்டும் என்று ஆக்ஸ்ஃபாம் வலியுறுத்துகிறது. இவற்றையெல்லாம் எப்படிச் செய்வது? தொழிற் செயல்பாடுகள் அனைத்தையும் மக்கள் நலனை முதன்மைப்படுத்தியாதாக மாற்ற வேண்டும் என்று ஆக்ஸ்ஃபாம் கூறுகிறது. காலநிலை மாற்றம் மனித குல இருப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ள நிலையில், அதைத் தடுக்கும் வகையிலான பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும் என்றும் அறிக்கையில் வலியுறுத்துகிறது.

### திருவிடைமருதூர் கோவிலில்...



தஞ்சை மாவட்டத்தில் திருவிடைமருதூர் கோயிலில் போய்ப் பார்த்தால் தெரியும். வரகுண மகாராஜன் என்ற பாண்டியன் தான் மோட்சம் அடைவதற்காக தன் மனைவியைப் பார்ப்பானுக்கு விட்டுக் கொடுத்தது சித்திரமாகச் சுவரிலேயே தீட்டப்பட்டு இருக்கின்றது! இவனது சிவபக்தியின் மேலீட்டைப் பற்றிப் பட்டினத்தார் பாடியுள்ள பாடலிலேயே வரகுண மகாராஜன் தன் மனைவியைப் பார்ப்பானுக்குக் கொடுத்ததை புகழ்ந்து பாடியுள்ளார். அந்தப் பாண்டியன் சேர-சோழர்களையெல்லாம் பராக்கிரமசாலி என்று சரித்திரம் கூறுகின்றது. அப்படிப்பட்டவன் தான் இப்படிக் கேவலமாக, மானமற்று நடந்து கொண்டான்.

அடுத்தாற்போல, திருவண்ணாமலையில் ஒரு அரசன் ஆண்டுள்ளான். அவன் பெயர் வல்லாள மகாராஜன் என்பது. அந்த மடையனும், தான் மோட்சமடைய வேண்டித் தன் மனைவியைப் பார்ப்பானுக்கு விட்டுக் கொடுத்து இருக்கிறான். **'விடுதலை'** 30.04.1961

# காந்தி கொலை: காபூர் விசாரணையிலிருந்து தப்பிக்க முயன்றவர் சாவர்க்கர் (3)

***'ஆனந்த விகடன்' வார ஏடு, 2019, டிசம்பர் 18 இதழில் சாவர்க்கர் பற்றிய கட்டுரை இது.***

*பாட்ஜேவின் வாக்குமூலம் இது... '1948 ஜனவரியில் நாங்கள் இருமுறை சாவர்க்கரை சந்தித்தோம். முதல் சந்திப்பு ஜனவரி 14ஆம் தேதி நடந்தது. நான், நாதுராம், ஆப்தே மூவரும் பாம்பேயில் இருக்கும் சாவர்க்கர் சதனுக்குச் சென்றோம். இரண்டாவது மாடியில் அவரது அறை இருந்தது. நான் கட்டடத்துக்கு வெளியே நின்றேன். நாதுராமும் ஆப்தேவும் உள்ளே சென்றனர். சிறிது நேரம் கழித்து இருவரும் வெளியே வந்தனர். 'காந்தியையும் நேருவையும் முடிக்க வேண்டும் என்று அவர் சொன்னதாக கோட்சே என்னிடம் சொன்னார்'.*

'Gandhi and Nehru should be finished' *என்ற வார்த்தையையே வாக்குமூலத்தில் சொல்கிறார் பாட்ஜே. அந்த ஜனவரி 14ஆம் தேதிதான், கோட்சேவின் கைக்கு துப்பாக்கியும் வந்து சேர்கிறது.*

*அடுத்த சந்திப்பு, ஜனவரி 17 ஆம் தேதி நடக்கிறது. இப்போதும் அதே மூவர்தான் செல்கிறார்கள். இந்த முறை பாட்ஜே, சதனுக்குள் நுழைந்து, முகப்புப் பகுதியில் நிற்கிறார். 10 நிமிடம் கழித்து கோட்சேவும் ஆப்தேவும் மாடி அறையில் இருந்து வெளியே வருவதை, பாட்ஜே கவனிக்கிறார். அவர்களுக்கு முன்னால் நின்றபடி ஒரு மனிதர் பேசிக் கொண்டிருக்கிறார். அவரது முகம் பாட்ஜேவுக்கு சரியாகத் தெரியவில்லை. ஆனால், குரல் நன்றாகக் கேட்கிறது. அந்த நபர், மராத்தியில் பேசுகிறார். 'வெற்றியுடன் திரும்புங்கள்' என்று, அவர் இருவர்களிடம் சொல்லும் வார்த்தை பாட்ஜேவின் காதில் விழுகிறது. அடுத்து, ஜனவரி 20ஆம் தேதி, காந்தியைக் கொல்ல ஒரு முயற்சி நடக்கிறது. அதைச் செய்தது, மதன்லால் பஹ்வா. 'விஷ்ணு கர்கரேவால் சாவர்க்கரிடம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டவன் அவன்' என்பது, சாவர்க்கரின் உதவியாளர்களான ராமச் சந்திரகாசரும் விஷ்ணு தம்லேவும் அளித்த வாக்குமூலம். ஆனால், அந்த முயற்சி தப்புகிறது. பஹ்வா கைது செய்யப்படுகிறான். ஜனவரி 30ஆம் தேதி காந்தி கொல்லப்படுகிறார். கோட்சேவின் துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட மூன்று குண்டுகள் அதைச் செய்கின்றன.*

*பாட்ஜேவை 'நம்பகமான சாட்சி* (Trustful Witness)' *என்றே வரையறுக்கிறார், விசாரணை நீதிமன்றத்தின் நீதிபதி ஆத்ம சரண். ஆனால், அவரது சாட்சியத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள், கிடைக்காமல் போகின்றன. இதன் அடிப்படையிலேயே, சாவர்க்கர் விடுவிக்கப்படுகிறார். உண்மையில், கோட்சேவுக்கும் சாவர்க்கருக்கும் இருந்த உறவு குரு - சிஷ்யன் வகையிலானது. இந்து மகாசபா கூட்டங்களுக்கு, கோட்சேவையும் ஆப்தேவையும் அழைத்துச் செல்வதில், அதிக ஆர்வமாக இருந்திருக்கிறார் சாவர்க்கர். ஆனால், காந்தி கொலைக்குப் பிறகு, இருவருக்கும் இடையே விரிசல் உண்டாகிறது. காரணம், சாவர்க்கரின் சந்தர்ப்பவாத வாக்குமூலம்! கோபால் கோட்சேவின் வழக்கறிஞர் இனாம்தார் நாதுராமின் அப்போதைய மனவோட்டம் என்னவாக இருந்தது என்பதைப் பதிவு செய்கிறார். 'நாதுராம் சிறையில் தனிமைப் பட்டுக் கிடந்தார். அவருக்கு அப்போது தேவைப் பட்டது அவரது கையை அன்பாகத் தொட்டு உரையாடக் கூடிய அவரது குருவின் சொல். ஆனால், அது நடக்கவில்லை. அந்த வருத்தத்தை சிறையில் என்னை சந்தித்தபோது பகிர்ந்து கொண்டார் நாதுராம்' என்கிறார் அவர்.*

*1964 அக்டோபரில் கோபால் கோட்சே விடுதலையானார். அடுத்த மாதமே, அவருக்கு ஒரு வரவேற்பு விழா நடக்கிறது. அதில், 'காந்தியைக் கொல்வதன் அனுகூலங்களை எனக்கு விளக்கினான் நாதுராம்' என்று சொல்கிறார் கோபால் கோட்சே. விவகாரம் மீண்டும் வெடிக்கிறது. நீதிபதி ஜேஎல் காபூர் தலைமையில் கமிட்டி அமைக்கப்பட்டு, காந்தி கொலை மறு விசாரணை செய்யப்படுகிறது. இது நடந்தது 1965 மார்ச் மாதம். அடுத்த வருடம், பிப்ரவரி மாதம் சாவர்க்கர் இறக்கிறார். உணவையும் தண்ணீரையும் மறுத்து வலுக்கட்டாயமாக அவர் அந்த மரணத்தைத் தேடிக்கொள்கிறார். அவர் அந்த முடிவை எடுக்க முக்கியமான காரணம், காபூர் கமிட்டியால் அவர் முற்றிலுமாக சுற்றி வளைக்கப் பட்டிருந்தார் என்பது. இன்னும் கொஞ்சநாள் இருந்திருந்தால், காபூர் கண்டிப்பாக சாவர்க்கர் கையில் விலங்கு மாட்டியிருப்பார். காபூர் அறிக்கையின் ஆறாம் அத்தியாத்தில்,* 'Background of the accused' *என்றொரு பகுதி இருக்கிறது. அதில், காந்தி கொலையில் சாவர்க்கருக்கு இருந்த பங்கு, விரிவாகவே பேசப்படுகிறது.*



*காந்தி மீதான சாவர்க்கரின் பகைக்கு மிக முக்கியக் காரணம், அவரது அகிம்சை! வாழ்வு முழுதுமே,* `Hindu Masculinity *(இந்து வீரம்)' என்பது குறித்து தீவிரமாகப் பேசுகிறார் சாவர்க்கர். ஒன்று தெரியுமா?* **சாவர்க்கர் பசு வழிபாட்டை கடுமையாக எதிர்த்தவர். அதற்குப் பின்னால் இருந்தது, பன்மைத்துவத்தைப் பேணும் அக்கறை என்று தவறாக நினைக்க வேண்டாம். 'பசுவை வணங்கினால் பசுவைப் போலவே நாமும் சாந்தமாகி விடுவோம்' என்று அவர் எண்ணியதே, அதற்குக் காரணம்.** *அந்த அளவுக்கு அகிம்சை அவருக்கு ஆகாத ஒன்றாக இருந்தது. அவர் ஆரம்ப காலத்தில் அங்கம் வகித்த, அபினவ் பாரத் அமைப்பு, அடிப்படையிலேயே வன்முறையைப் போற்றும் அமைப்பு. அதிலிருந்து கிளைத்து எழுந்து வந்தவர் அவர்! இந்துக்களை வீரம்மிக்க ஒரு சமுதாயமாகவே அவர் உருவகித்தார். 'பள்ளிகளில் படிப்பைவிட உடற்பயிற்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்' என்று அவர் குரல் கொடுத்தது, அதற்காகவே. கனவு வெளியில், வேதகாலத்திலேயே வாழ்ந்துகொண்டிருந்த மனிதர் அவர். ஆகவே, அகிம்சை அவருக்கு பிடிக்கவில்லை.*

- **காந்தி கொலையை மறு விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட கபூர் ஆணையம் அமைத்த ஒரு மாதத்திலேயே சாவர்க்கர் பட்டினி கிடந்து மரணத்தை ஏற்றார். விசாரணையில் சிக்கி விடுவோம் என்ற அச்சமே காரணம்.**
- **பசுவை வணங்கினால் நாமும் சாந்தமாகி விடுவோம்; கோழையாவோம் என்ற காரணத்தால் பசு வணக்கத்தை எதிர்த்தார்.**
- **நேதாஜியுடன் இணைந்து போரிடாததற்குக் காரணம் நேதாஜியிடம் இஸ்லாமிய எதிர்ப்பு இல்லை என்பதுதான்.**
- **எந்த நடவடிக்கையிலும் தன்னை நேரடியாக ஈடுபடுத்திக் கொள்ளாமல் திரைமறைவில் இயங்குவதே சாவர்க்கர் பண்பு.**

*இப்படிப்பட்டவர், வீரம்செறிந்த நேதாஜியுடன் இணைந்திருக்கலாமே என்ற கேள்வி, சிலருக்கு எழலாம். அந்தக் கேள்வி நியாயமான ஒன்று. ஆனால், அங்கேதான் ஒரு விஷயம் இருக்கிறது. அதாவது, காந்தியைப்போலவே, நேதாஜியும் உடையாத, மதச்சார்பு இல்லாத ஒரு இந்தியாவை கனவு கண்டவர். நேதாஜியின் அகிம்சையைக் காந்தி சந்தேகித்தாரே ஒழிய, அவரது மதச்சார்பற்ற தன்மையை அவர் எப்போதுமே சந்தேகித்ததில்லை.* **நேதாஜியின் படையில் இஸ்லாமியர்களும் அதிகளவில் பங்கெடுத்ததற்கு, அவரது மதச்சார்பற்ற தன்மையே காரணம். அது, சாவர்க்கரின் பிரித்தாளும் கொள்கைக்கு உவப்பானதாக இல்லை.** *அதுவும் இல்லாமல், சாவர்க்கர் களவீரரும் அல்ல. அவர் எப்போதுமே பின்னால் இருந்து இயங்குபவர். தூண்டிவிடுவதில் சமர்த்தர்.* `Man in the chair' *என்போம் அல்லவா, அதே போன்றவர்.*

*இன்னொன்று தெரியுமா? அவர், இந்தியாவில் வைத்து கைது செய்யப்படவில்லை. லண்டனில் வைத்துதான் கைதானார். வில்லியம் கர்சனின் கொலையாக இருக்கட்டும், ஜாக்சனின் கொலையாக இருக்கட்டும், அவர் நேரடியாகச் செயலாற்றவே இல்லை. அதற்குரிய அத்தனை உதவிகளையும் செய்தார், திட்டங்களை வகுத்தார். '20 துப்பாக்கிகளை அவர் லண்டனிலிருந்து இந்தியாவுக்கு அனுப்பினார்' என்கின்றன, தரவுகள். ஆனால், எங்குமே காட்சிக்கு வராமல் சாமர்த்தியமாக ஒதுங்கிக் கொண்டார் சாவர்க்கர். அந்தமான் சிறையிலும்கூட தூண்டிவிடும் வேலையை கச்சிதமாகச் செய்திருக்கிறார். சக கைதிகளை உண்ணா விரதத்துக்குத் தூண்டிவிட்டுவிட்டு, அவர் உணவருந்த சென்ற நிகழ்வும்கூட நடந்திருக்கிறது.*

*ஆகவே, இதுதான் சாவர்க்கர்! இவைதான் அவரது அரசியல்! மக்களைப் பிரித்தாளும் சித்தாந்தம், களத்துக்கு வராமல் பின்னே இருந்து இயங்குவது, மாட்டிக் கொண்டால் சீடனாகவே இருந்தாலும் கழட்டி விடுவது என்று இருந்தவர் சாவர்க்கர். அவரது சித்தாந்தத்தாலோ, அவரது செயற்பாடுகளாலோ இந்தியாவுக்கும் எந்தப் பயனுமில்லை. இவ்வளவு எடுத்துச் சொன்ன பிறகும், 'சாவர்க்கருக்கு பாரதரத்னா கொடுத்தால் என்ன தப்பு' என்று கேட்பவர்களிடம் சொல்வதற்கு ஒன்று மில்லை. குறைந்தபட்சம் ஒன்றை மட்டுமேனும் உணர்வோம். சாவர்க்கர் முன்னே எழுந்துவரும் ஒவ்வொரு முறையும் அசோகர் புதைக்கப்படுகிறார், அவரது தத்துவம் புதைக்கப்படுகிறது. ஒன்றை யோசிப்போம். அகிலத்தின் எத்தனையோ நாடுகளில் ஜனநாயகம் வெறும் கனவாக மட்டுமே இருக்கும் சூழலில், இந்தியா மட்டும் எப்படி அதை இன்னும் தக்க வைத்திருக்கிறது? காற்றடித்தாலும் மழையடித்தாலும், இந்தியாவின் ஜனநாயக தீபம் மட்டும் தொடர்ந்து ஒளிர்வது எப்படி. காரணம் எளிது. ஏனென்றால், இந்தியாவின் மரபிலேயே ஜனநாயகப் பண்புகள் இறுக்கிக் கட்டப்பட்டிருக்கின்றன. கட்டியவர், அந்த மகா சக்கரவர்த்தி அசோகர்! அவரும் ஓர் அரசர்தான். ஆனால், மற்ற அரசர்களிடம் இருந்து அசோகர் எங்கே வேறுபடுகிறார் தெரியுமா. மக்களின் மீதான அபிமானத்தில் வேறுபாடுகிறார். மரபை சீரமைத்து முன்னெடுத்துச் சென்றதில், வேறுபடுகிறார். கலிங்கத்தின் தயா நதிக்கரையில் இறந்து மிதந்த மனித உடல்களைக் கண்டு, 'என்ன செய்துவிட்டேன் நான்...' என்று வருந்திய குரலில், வேறுபடுகிறார்.*

*ஆம். இத்தேசம் அசோக தத்துவத்தால் கட்டமைக்கப்பட்டது! 'வரலாற்றை நிறைத்து நிற்கும் எத்தனையோ பேரரசர்களின் பெயர்களின் மத்தியில், அசோகர் மட்டுமே ஒரு வீழா நட்சத்திரமென தனித்து ஒளிர்கிறார்' என்று ஆய்வாளர் ஹெச்.ஜி. வெல்ஸ் விழிவிரித்து கூறினாரே, அந்த அசோகரின் தத்துவத்தால் கட்டமைக்கப்பட்டது! இதை உணர்ந்தே, சிவாஜியை இடதுபக்கமும் அக்பரை வலது பக்கமும் ஒதுக்கிவிட்டு, அசோகரை இந்தியாவுக்கு அடையாளமாக்கினார் நேரு. தர்ம சக்கரம் சுழலும் அந்தச் சிங்கச் சிலையை இந்திய சின்னமாக்கி, 'எழுக அவர் வேதம். எக்குடியும் என் குடியே என்றுரைக்கும் அசோகவேதம்' என்று நேரு அறிவித்த போது, இந்திய அன்னை துள்ளிக் குதித்து கூத்தாடினாள். சாவர்க்கர் வழிபாடு, அவளின் அந்த சந்தோஷத்தைக் கண்டிப்பாக நிர்மூலமாக்கும். 2,000 ஆண்டுகளாக இந்த மண்ணில் ஊறி நின்றிருக்கும் மகத்துவத்தை, அது 20 வருடங்களுக்குள் அழித்தொழிக்கும்.*

*அறிக... அசோகரே புதைகிறாரென்றால் காந்தியும் இருக்கப்போவதில்லை. நேருவும் அகன்றிருப்பார். அம்பேத்கரும்கூட கைவிட்டிருப்பார். இது உருவாக்கப் போகும் விளைவை, நம்மால் இப்போது உணர முடியாது. ஹிட்லரின் ஜெர்மனியாக, நத்தேன்யாஹூவின் இஸ்ரேலாக இத்தேசம் மாற்றப்பட்ட பிறகுதான், நமக்கு அந்த உணர்வு எழும். ஆனால், அப்போது எல்லாமே கையைமீறிப் போயிருக்கும். நமக்கான கங்கைகளைத் தேடி நாம் அலையத் தொடங்கியிருப்போம். நாசிக்குள் புகுந்து நம்மை நிலைகுலையச் செய்யும் ரத்தத்தின் வீச்சத்தை நம்மால் கடக்கவே முடியாமல் இருக்கும். அது வீடோ, அலுவலகமோ, பேருந்தோ, ரயிலோ, ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து வெறுமனே அமர்ந்திருப்போம். உண்ணச் சென்றால், தட்டில் இஸ்லாமிய குழந்தையின் உடைக்கப்பட்ட வெள்ளெலும்பு உணவென நெளியும். உறங்கச் சென்றால், கிறிஸ்துவ குழந்தையின் உரிக்கப்பட்ட தோல், படுக்கை விரிப்பென விரியும். அரண்டு ஓடிவந்து வெட்ட வெளியில் நின்று, வான்நோக்கி இறைஞ்சுவோம், 'அய்யோ... அப்போதே உணரத் தவறிவிட்டோமே...' என்று. அதைக் கேட்கவும் அப்போது நாதியிருக்காது. கடவுளால் தனித்துவிடப் பட்டிருப்போம். அறத்தால் தள்ளிவைக்கப்பட்டிருப் போம். மனிதர்களை மதத்தாலும், இனத்தாலும் பிரித்து அரசியல் செய்த அரக்கர்களின் பின்னால் நின்ற அத்தனை பேருக்கும் கடைசியில் எஞ்சுவது, தீரா பழிச்சொல்லும், விலகா பெரும் பாவமுமே.*

*அது நமக்கு உவப்பென்றால், சாவர்க்கருக்கு பாரதரத்னா அளிப்போம். அடுத்து, கோல்வால்கருக்கும். கடைசியாக, கோட்சேவுக்கும்!*

*(நிறைவு)*

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# தேர்தல் களத்தை மாற்றி அமைக்கும் தி.மு.க.வின் மக்கள் சந்திப்புகள்

தமிழ்நாட்டு தேர்தல் களத்தில் மக்கள் பிரச்சினைகளை நேரடியாக அறிந்து அவைகளை ஆட்சிக்கு வந்தால் தீர்த்து வைக்கும் ஒரு திட்டத்தோடு தி.மு.க. களமிறங்கியிருப்பது உண்மையில் வரவேற்கப்பட வேண்டிய ஒரு அணுகுமுறையாகும்.

கடந்த காலங்களில் குறிப்பாக ‘எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா’ என்ற திரைப்பட பிம்பங்கள் அரசியலுக்கு வந்த பிறகு தேர்தல் பரப்புரையின் முறைமைகளே மாறிப் போனது. இந்த ‘பிம்பங்களை’ நேரில் பார்க்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த மக்கள் கூட்டத்தைத் திரட்டி அவர்கள் முன் தோன்றினாலே போதும் என்ற நிலை உருவாக்கப்பட்டது. தேர்தலுக்கு 15 நாட்களுக்கு முன்பு அவர்களுக்கான பரப்புரைத் திட்டங்கள் வகுக்கப்பட்டு மக்களை உரிய ‘வசதி’களைத் தந்து திரட்டிக் கொண்டு வருவார்கள். இதற்கு பல கோடி ரூபாய் பணம் தண்ணீராய் வாரி இறைக்கப்படும். ஹெலிகாப்டர்களில் தலைவர்கள் வந்து இறங்கி எழுதி வைத்த உரையைப் படிப்பார்கள். 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் வரும்போது, அந்த 15 அல்லது 20 நாட்கள் மட்டுமே மக்கள் சந்திப்பு நடக்கும். வழக்கம்போல தேர்தலுக்கு முன்பு நடக்கும் ‘வாக்காளர் கவனிப்புகளோடு’ தேர்தல் களம் நிறைவடைந்து விடும். மக்கள் சந்திப்பு களுக்கும் திரை போடப்பட்டுவிடும்.

இதற்கு மாறாக, மக்களை கிராமம் கிராமமாகச் சென்று சந்திப்பது, மக்களின் கோரிக்கைகளைக் கேட்பது என்று தமிழகம் முழுதும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கிராம சபைகளை தி.மு.க. தலைவர் ஸ்டாலின் மற்றும் தி.மு.க. பொறுப்பாளர்கள் நடத்தினர். இப்போது ‘உங்கள் தொகுதியில் ஸ்டாலின்’ என்ற தலைப்பில் 234 தொகுதிகளிலும் மக்கள் சந்திப்பு இயக்கத்தை நடத்துகிறார் தி.மு.க. தலைவர். மக்கள் தங்களின் உள்ளூர் பிரச்சினைகள் அரசு நிர்வாக வழியாக தீர்க்கப் படாமல் இழுத்தடிக்கப்படும் சொந்தப் பிரச்சினைகளை மனுக்களாக வழங்குகிறார்கள். மனுக்களைப் பெற்று ஒரு பெட்டியில் மூடி மக்கள் முன்னால் சீல் வைத்து ஆட்சிக்கு வந்த 100 நாட்களில் பிரச்சினைகளைத் தீர்ப்போம் என்ற உறுதிமொழி யோடு இந்த ஆக்கபூர்வ சந்திப்பு நிகழ்வை நடத்தி வருகிறார், மு.க. ஸ்டாலின்.

பா.ஜ.க. அதிகாரத்துக்கு வந்த பிறகு மாநில உரிமைகளை படிப்படியாகப் பறித்து வருகிறது. கல்வி உரிமை, வரி விதிப்பு உரிமை, விவசாயம் சார்ந்த உரிமை, மொழி உரிமை, மருத்துவ உரிமை என்று அனைத்து உரிமை களும் பறிக்கப்பட்டு மாநிலங்கள் முடக்கப்பட்டுக் கிடக்கின்றன. உள்ளாட்சி அமைப்புகள் தீர்க்க வேண்டிய ‘சிவில்’ உரிமைகள் மட்டுமே மாநில அரசுகளிடம் தங்கி நிற்கிறது. ஒரு பக்கம் பறிக்கப்படும் அரசியல் உரிமைகளுக்கு எதிராக போராட்டம் நடத்தியே தீர வேண்டிய நிலையில் மக்களின் அன்றாட வாழ்க்கையின் அத்தியாவசியமாகிப் போன நிர்வாகம் சார்ந்த மக்கள் பிரச்சினைகளை அரசு நிர்வாகம் கண்டு கொள்வது இல்லை. இந்தப் பின்னணியில் அரசு அதிகாரத்துக்கு உட்பட்ட மக்கள் சார்ந்த பிரச்சினை களுக்கு முகம் கொடுத்து தேர்தல் களத்தை ஆக்கப்பூர்வமாக மாற்றியமைத்திருக்கிறார், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின்.

இதையே ஆளும் அ.இ.அ.தி.மு.க.வோ, பா.ஜ.க.வோ செய்திருந்தால் ஊடகங்கள் ஊதிப் பெருக்கி கொண்டாடி கும்மாளம் போட் டிருக்கும். ஆனால் தி.மு.க. செய்கிறது என்பதால் முழுமையாக இருட்டடிக்கப்படுகின்றன.

சொல்லப் போனால் மக்களை நேரடியாக சந்திக்காமல் அவர்களின் பிரச்சினைகளுக்கு காது கொடுக்காமல் தேர்தல் களத்தைச் சந்திக்க முடியாது என்ற நெருக்கடியை அனைத்து அரசியல் கட்சிகளுக்குமே உருவாக்கியிருக்கிறது தி.மு.க.வின் இந்த மக்கள் சந்திப்பு இயக்கங்கள்.

‘உலகமயமாக்கல்’ என்ற கொள்கைக்குப் பிறகு பன்னாட்டு நிறுவனங்களிடம் நாடு கையளிக்கப்பட்டது. அதன் பிறகு ‘கார்ப்பரேட்’ கலாச்சாரமான நவீன தொழில் நுட்பமும் கோடியாக பணப் புழக்க மும் அரசியல் கட்சிகளின் கலாச்சார மாகிப் போனது. இதிலிருந்து விலகி நிற்கும் எந்தக் கட்சியும் தேர்தல் களத் துக்குள்ளேயே நுழைய முடியாது என்பதே எதார்த்தம். அதன் காரணமாக புதிது புதிதாக அரசியல் கட்சிகள் ஒவ்வொரு நாளும் முளைவிட்டுக் கொண்டிருக் கின்றன. தொண்டர்களே இல்லாத தலைவர்கள்கூட சொகுசு வாழ்க்கை வாழ்கிறார்கள்.

ஆன்மீக அரசியல்கூட இதில் தப்பிடவில்லை. திரைப்படத் துறையில் கோடிக்கணக்கில் கருப்புப் பணம் வாங்கும் நடிகர்கள்தான் அதற்கும் தேவைப்பட்டார்கள். இந்த நிலையில் தி.மு.க.வை மட்டும் குறி வைத்து தனிமைப்படுத்தி அதைத் ‘தீண்டப் படாத’ கட்சியாகக் காட்ட வேண்டும் என்பதில் பார்ப்பனர்களும், ஊடகங்களும், போலி தமிழ் தேசிய வாதிகளும் உறுதியாக நிற்கிறார்கள்.

மார்க்சியம் - மார்க்சிய-லெனினிய தத்துவங்களோடு தேர்தல் பாதைக்குப் போகாத இயக்கங்கள்கூட ‘பா.ஜ.க. வை வீழ்த்துவோம்; பாசிசத்தை முறியடிப்போம்’ என்ற முழக்கத்தோடு நிறுத்திக் கொள்கிறார்கள்.

அதை வீழ்த்துவதற்கு பா.ஜ.க.வின் எடுபிடிகளை எதிர்க்க வேண்டாமா? இன்று பா.ஜ.க.பார்ப்பனிய சக்தி களால் குறி வைத்து தாக்கப்படும் தி.மு.க.வை ஆதரிப்பதில், ஏன் தயக்கம் காட்ட வேண்டும்? இது பார்ப்பன பாசிசத்தை வீழ்த்தும் நடைமுறை செயல் உத்தியல்லவா? என்ற கேள்விகளுக்கு பதில் சொல்ல மறுக்கிறார்கள். ‘மக்கள் பிரச்சினை; மக்கள் அரசியல்’ என்றெல்லாம் பேசும் இந்த முற்போக்கு இயக்கங்கள்கூட மக்கள் பிரச்சினைகளை முன்னிறுத்தி தேர்தல் களத்தின் பண்புகளை மாற்றியமைக்க விரும்பும் தி.மு.க.வைப் பாராட்ட மனம் வரவில்லை; மாறாக குற்றங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இதுவும் நவீன பார்ப்பனிய பார்வை என்றே சொல்ல வேண்டியிருக்கிறது!

பார்ப்பனர் ஒருவரைக்கூட சட்ட மன்ற உறுப்பினராக்காத - பார்ப்பனர் ஒருவரைக்கூட அமைச்சரவையில் இடம் பெறச் செய்யாத கட்சி, தி.மு.க.வைத் தவிர வேறு ஏதாவது இருக்கிறதா?

நாளைக்கு தி.மு.க., பா.ஜ.க.வை ஆதரிக்காது என்பதற்கு என்ன உறுதி என்று எதிர் கேள்வி வைக்கிறார்கள். வாதத்துக்காக ஒப்புக் கொண்டாலும் அதற்காக இப்போதே பா.ஜ.க.வை ஆதரிக்கும் கட்சிகளின் முகத்திரையைக் கிழிக்காமல் ஒதுங்கி நிற்பது என்ன நியாயம்?

பார்ப்பன எதிர்ப்பு - வெறுப்புப் பின்னணியில் தி.மு.க.வின் இந்த மக்கள் சந்திப்பு அணுகு முறையை தேர்தல் அரசியல் பார்வைகளையும் கடந்து பாராட்ட வேண்டும். அரசியல் மக்களுக்கானது என்ற கருத்தை உண்மையாக ஏற்கக் கூடிய எவராக இருந்தாலும் இதை பாராட்டவே செய்வார்கள்.

**– இராசேந்திரன்**

## கழகத் தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார் தந்தை நடேசன் படத்திறப்பு



கழகத் தலைமைக் குழு உறுப்பினர் ந. அய்யனார் தந்தை நடேசன்(75) கடந்த 25.01.2021 அன்று அதிகாலை உடல் நலக் குறைவால் முடிவெய்தினார். நடேசன் அவர்களின் இறுதி நிகழ்வு 25.01.2021 அன்று மாலை 4 மணியளவில் எந்த வித சடங்கு, சம்பிரதாயங்களும் இல்லாமல் நடைபெற்றது.

நடேசனின் படத்திறப்பு நிகழ்வு 31.01.2021 அன்று கள்ளக்குறிச்சி மாவட்டம் கடுவனூரில் காலை 10 மணியளவில் நடைபெற்றது. நிகழ்விற்கு, ச.கு.பெரியார் வெங்கட் வரவேற்பு கூறினார். கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி படத்தைத் திறந்து வைத்தார்.

தலைமைக் குழு உறுப்பினர் ந. அய்யனார் தொடக்கவுரையாற்றினார். கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தலைமைக்குழு உறுப்பினர் மடத்துக்குளம் மோகன், திவிக கள்ளக்குறிச்சி மாவட்ட அமைப்பாளர் சி.சாமிதுரை, விழுப்புரம் மாவட்டத் தலைவர் பூ.ஆ. இளையரசன், விழுப்புரம் மாவட்ட செயலாளர் கோ.சாக்ரடீசு, வேலூர் மாவட்ட செயலாளர் இரா.பா.சிவா, சென்னை மாவட்ட செயலாளர் இரா.உமாபதி, மக்கள் குடியரசுக் கட்சி தம்பி மண்டேலா, கள்ளக்குறிச்சி திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் நா.வெற்றிவேல், புதுவை தமிழக வாழ்வுரிமைக் கட்சி விஜயன், சங்கை தமிழ் படைப்பாளர் தலைவர் அரங்க செம்பியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி இல.சிலம்பன் ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினர். நிகழ்வை கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர்க. இராமர் தொகுத்து வழங்கினார்.

நிகழ்வில், தலைமைக்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், சென்னை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் கழகத் தோழர்களும் கலந்து கொண்டனர்.

## வினா விடை

- பா.ஜ.க. – அ.இ.அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திக்கும்.
  **– ஜே.பி. நட்டா**

  அ.இ.அ.தி.மு.க.வுக்கு 20 இடங்கள் ஒதுக்குவீர்களா? அல்லது அதற்கும் குறைவாகவா?

- உலகப் பிரச்சினைகளையெல்லாம் இந்தியா தீர்த்து வைத்திருக்கிறது.
  **– மோடி**

  கடந்த ஆண்டு நீங்கள் உலகப் பயணமே போகவில்லையே! அதுதான் ‘ஜி’ காரணம்!

- புரட்சித் தலைவி அம்மா உயிருடன் இருந்திருந்தால்கூட இவ்வளவு சிறப்பாக நினைவிடம் அமைத்திருக்க முடியாது.
  **– அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன்**

  இந்தப் பொன்மொழியை அங்கேயே ஒரு கல்வெட்டில் செதுக்கி, எவரும் இடித்து விடாமல் பாதுகாக்க அங்கேயே உட்கார்ந்துக்குங்க.

- நான் எதற்கு கருவறைக்குள் போக வேண்டும்? அதற்குரிய தகுதி உள்ளவர்கள்தான் போக முடியும். **– பா.ஜ.க. தலைவர் முருகன்**

  பா.ஜ.க. தலைவராக இருக்க உங்களுக்கு முழுத் தகுதி இருக்கிறது என்பதை நிரூபிச்சுட்டீங்க.

- தேசியக் கொடி அவமதிப்பால் தேசம் அதிர்ச்சி அடைந்துள்ளது.
  **– மோடி பேச்சு**

  அதை சரி செய்யத்தான் தேசத்தைப் பாதுகாக்க பன்னாட்டு கம்பெனிகளிடம் விற்கிறீங்க போல...

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 04th February 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN